நாள்.26.08.2025

அசல் வழக்கு எண்.**198/2009**

வா. சா.**1**

பெயர்.முகமது அலி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிராது 1ம் தபசிலில் சொல்லி உள்ள எல்கையில் முஸ்லீம் தெற்கு தெருவில் முகமது அஸ்ரப் அலி, அபுபக்கர், சாகுல் அமீது வீட்டு மனை பொது சுவற்றிற்கு கிழக்கு என்றால் சரிதான். கிழமேல் தெருவிற்கு வடக்கு என்றால் சரிதான், கிழமேல் தெருவிற்கு தெற்கு என்றால் சரிதான், உதுமான் மைதீன் மனைக்கு தற்போது அனுபவதாரரான பிரதிவாதி மனையின் பொது சுவற்றிற்கு மேற்கு என்று உள்ளது என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதிக்கும் உள்ள தாவானது அளவுகளை பொறுத்து தான் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டபடும் புகைபடத்தில் பச்சை நிறம் உள்ள வீடு வாதி வீடு என்றாலும், வெள்ளை நிறம் உள்ள வீடு பிரதிவாதி வீடு என்றால் சரிதான், ஆக்கிரமிப்பு செய்யபட்ட பிறகு கட்டபட்ட பிரதிவாதி வீடு ஆகும். மேற்படி புகைபடம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யபடுகிறது (பிரிவு 65B சான்று இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது). பிரதிவாதிகள் வீடு கட்டி 40 ஆண்டுகள் இருக்குமா என்றால் தெரியாது. என்னுடைய வீடு கட்டி 50 வருடங்கள் இருக்குமா என்றால் சரியாக தெரியாது. என்னிடம் காட்டபடும் புகைபடங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதி வீடானது ஆக்கிரமிப்புக்கு பின்பு கட்டபட்டது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய தகப்பனார் பெயர் நாகூர் மைதீன். வழக்கின் வாதிகள் மூவரும் என்னுடைய தந்தையின் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். அது போக பீர் பாத்து, முகமதாள், ஆஜராள், முத்து மீராள், பாப்பாத்தி என்ற காதர் பாத் என்ற சகோதரிகள் உண்டு என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் பிராதில் வாய்மொழி பாகபிரிவினை என்று சொல்லி உள்ளேன், மேற்படி பாகபிரிவினை எங்கு வைத்து யார் முன்னிலையில் எந்த தேதியில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினையில் யார் யாருக்கு எந்த சொத்து ஒதுக்கபட்டது என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

பொதுவாக ஒரு சொத்தின் மதிப்பு 100 ரூபாய்க்கு மேல் இருக்கும் போது சொத்து பதிவு செய்யபட்ட ஆவணத்தின் மூலம் தான் உரிமை கோர முடியும் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எவ்வித பாகபிரிவினையும் ஏற்படவில்லை என்றாலும், அதனால் எனக்கு சொத்தில் உரிமை இல்லை என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.6 ஆன வருவாய் துறை ஆவணத்தின் படி தபசில் சொத்து எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு மூல ஆவணங்கள் உள்ளது என்றால் கிடையாது. 1932 ஆண்டு பத்திரத்திற்கு முன் பத்திரம் உள்ளது. மேற்படி முன் பத்திரம் வழக்கில் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டபடும் பிராதில் தாவா சொத்து பொறுத்து எதிரிடை அனுபவம் கோருகிறோம் என்றால் சரிதான். எனக்கு எதிரிடை மூலம் பாத்தியம் என்றால் ஆவணங்கள் மூலம் பாத்தியம் கிடையாது என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் மூலமும் பாத்தியம் தான். நான் எதிரிடை மூலம் பாத்தியம் என்று சொல்லிவிட்டு தற்போது ஆவணங்கள் மூலம் பாத்தியம் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் முறைபடி சட்ட அறிவிப்பு அனுப்பாமல் தாக்கல் செய்த இந்த வழக்கு செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னுடைய வழக்கில் சொல்லபட்டுள்ள வியாஜ்ஜிய மூலங்கள் சரியாக சொல்லபடவில்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து ஆக்கிரமிப்பு சொத்து கிடையாது என்றால் ஆக்கிரமிப்பு சொத்து தான். 2ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொந்த சொத்து என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் சொத்து உள்ளது என்று கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, என் தந்தை பெயரில் ஆவணம் உள்ளது. வா.சா.ஆ.6 ஆவணம் தவிர எங்கள் உரிமையை காட்டுதவற்கு வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என் தந்தை பெயரில் உள்ளது.

தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்தின் மதிப்பு தெரிந்து தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தற்போது எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல, சம்பந்தம் உள்ளது. 1999லும், 2009லும் பிரதிவாதி தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லி உள்ளேன், மேற்படி ஆக்கிரமிப்பை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

மேற்படி காலகட்டத்தில் பிரதிவாதிகள் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அளவுகள் சரியானது அல்ல என்றால் சரியல்ல, சரியான அளவுகள் தான். ஆவணங்களில் உள்ள அளவுகளுக்கும் பூமியில் உள்ள அளவுகளுக்கும் வித்தியாசங்கள் உள்ளது என்றால் சரியல்ல, சரியாக தான் உள்ளது. தாவா சொத்தும் பிரதிவாதி சொத்துகளும் ஆதியில் மியான்கான் ராவுத்தர், பிச்சை முகமது ராவுத்தர், அப்துலா ராவுத்தர் என்ற மூன்று பேருக்கு ஆவண எண்.35/1893 மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை.

மேற்படி ஆவணத்தின் மூலம் மேற்படி மூவருக்கும் கிழமேல் 24 தச்சு முழத்தில் தலா 8 தச்சு முழம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மியான்கான் ராவுத்தருக்கு உரிய 8 தச்சு முழம் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் என் தகப்பனார் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மூலம் தான் எனது தாத்தா முத்து மீரான் ராவுத்தரும் சேகு அலி ராவுத்தரும் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான், ஆனால் முன் ஆவணத்தின் படி கிரையம் பெறவில்லை. மேல்பக்கம் உள்ள 8 தச்சு முழம் என்

தந்தை ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, என் தாத்தா கிரையம் பெற்றார்.

மத்தியில் உள்ள 8 தச்சு முழம் பிச்சை முகமது ராவுத்தருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அவருக்கு 9 ¾ தச்சு முழம் பாத்தியப்பட்டது. அவருக்கு 8 தச்சு முழம் தான் பாத்தியப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிச்சை முகமது ராவுத்தருக்கு உஸ்மான் ராவுத்தார் என்ற மகன் உண்டு என்றால் சரிதான். மேற்படி உஸ்மான் ராவுத்தர் 09.06.2021ல் அப்துலா ராவுத்தருக்கு 9 ¾ தச்சு முழம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அப்துலா ராவுத்தர் 09.09.2021ல் மீரான் பிள்ளை ராவுத்தருக்கு கிழமேல் 9 ¾ லில் இருந்து குறைத்து கிழமேல் 9 ½ தச்சு முழம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

மீரான் பிள்ளை ராவுத்தர் எனது தாத்தா முத்து மீரானுக்கு கிழமேலாக 3.3/8 தச்சு முழத்தை 21.12.1932ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தவறு. மீரான் பிள்ளை ராவுத்தர் 08.10.1930ல் மைதீன் என்பருக்கு கிழமேல் 9½ தச்சு முழம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.12.09.1932ல் மைதீன் என்பவர் முத்து மீரானுக்கு கிழமேல் 3. 3/8 தச்சு முழம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 12.09.1932ல் மைதீன் ராவுத்தர் என்பவர் பூவம்மாள் என்பவருக்கு கிழமேலாக 5 .5/8 தச்சு முழம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சுவர் கனம் ¼ முழம் நீக்கி கிரையம் கொடுக்கபட்டுள்ளது.

மேற்படி பூவம்மாள் என்பவரிடம் தான் எனது தகப்பனார் நாகூர் மைதீன் 5. 5/8 தச்சு முழத்திற்கு பதிலாக 5 ¾ தச்சு முழம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேலே சொல்லபட்ட ஆவணங்களின்படி தென்வடல் தச்சு முழம் 24 என்றால் சரியல்ல. மேற்படி 24 தச்சு முழத்திற்கு வடபுறம் தான் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பொது கிணற்றில் தண்ணீர் எடுக்கும் வசதிக்காக நாங்களும் மேல்பக்கம் கதவு போட்டு உள்ளோம் என்றாலும், கீழ்பக்கம் பிரதிவாதி பொது கிணற்றில் தண்ணீர் எடுக்கும் வசதிக்காக கதவு போட்டு உள்ளோம் என்றாலும், சரிதான்.

பிச்சை முகமது ராவுத்தர் காலம் சென்ற பிறகு அவரது வாரிசுகள் அவருக்கு 8 தச்சு முழத்திற்கு பதிலாக கூடுதலான அளவுகள் குறிப்பிட்டு மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தியதால் தான் பிரதிவாதி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அப்துல்லா ராவுத்தருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பூமியில் மொத்தம் 24 தச்சு முழம் இடம் தான் உள்ளது என்றாலும், மீயான்கான் ராவுத்தர், பிச்சை முகமது ராவுத்தர், அப்துல்லா ராவுத்தர் ஆகியோர்களுக்கு தலா 8 தச்சு முழம் தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் தவறு.

நான் கிரையம் வாங்கிய ஆவணங்களும் அதற்கு மூல ஆவணங்களிலும் அளவு சரியில்லாத காரணத்தினால் தான் நான் கூடுதல் அளவு உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறான அளவுகளை கொண்டு வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை கஷ்டபடுத்துகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற அறிக்கையின் படி தாவா சொத்தில் யாதொரு ஆக்கிரமிப்பு இல்லை என்று தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த முறை தவறானது

என்றால் சரியல்ல. என் முன்னோர்கள் காலத்தில் தாவா சொத்து இருந்த படி தான் நானும் பிரதிவாதியும் சொத்துகளை அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.09.01 16:24:37 +0530